# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI

O.S. No.52 of 2022

Deposition of PW.2

Name of the Witness: திரு.காந்தி

Date : 13.03.2026

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பில்)**

1) வாதி எனக்கு மச்சான் உறவு ஆகும். பிரதிவாதிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். தாவா சொத்து காதர் அலிக்கு சொந்தமானது. தாவா சொத்து காதர் அலி அம்மாவிற்கு பாத்தியமானது, அதனால் அவருக்கும் உரிமை உள்ளது. மாதர் பீ மற்றும் அவரது மகன் காதர் அலி வாதிக்கு நிலத்தை குத்தகை விட்டார்கள். மாதர் பீ–க்கு நான்கு பெண்கள் உள்ளார்கள். அவர்கள் சிறிய பிள்ளைகள் என்பதால் அவரிடம் கையெழுத்து வாங்கவில்லை. எனக்கு தெரிந்து காதர் அலிதான் வயதில் பெரியவர்.

2) குத்தகை ஒப்பந்தம் போடும்போது காதர் அலிக்கு 15 வயது இருக்கும். காதர் அலியின் அக்காதான் அஷீரா பாபி என்றால் எனக்கு சரியாக தெரியாது. குத்தகை ஒப்பந்தம் எழுதும்போது நான் உடன் இல்லை. குத்தகை ஒப்பந்தமே ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 30 ஆண்டுகளுக்கு முன்பு ஆண்டு ஒன்றுக்கு ரூ.5000/– ஊர் பொதுவர்கள் முன்னிலையில் வாய்மொழியாக குத்தகை

விடப்பட்டது என்று நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி இருப்பது பற்றி எனக்கு தெரியாது.

3) நான் விவசாயம் தொழில் செய்து வருகிறேன். வாதி பென்னாகரம் நீதிமன்றத்தில் போட்ட வழக்கை பற்றி எனக்கு நேரடியாக தெரியும். அந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்கவில்லை. இந்த சொத்து விசயமாக இந்த நீதிமன்றத்தில்தான் முதலில் சாட்சியம் அளிக்கிறேன்.

4) வாதி ரூ.10,00,000/- பணம் கொடுத்தார். அப்போது நானும் ஊர் பொதுமக்கள் அனைவரும் இருந்தார்கள். ஒப்பந்தம் போடுவதற்கு ரூ.100/- முத்திரை தாள்களை வாதி வாங்கி வந்தார். ரூ.10,00,000/- பணம் ரூ.500/- நோட்டுகளாக கொடுக்கப்பட்டது. வாதி விவசாயம் செய்து வருகிறார். ஒப்பந்தத்தில் சென்ட் ரூ.37,000/-க்கு விலை பேசப்பட்டது. மீதி பணத்திற்கு 3 மாத கால அவகாசம் நிர்ணயிக்கப்பட்டது. வாதி 3 மாதத்திற்குள் கிரயம் செய்ய முன் வரவில்லை என்றால் அவர் முன்பணத்தை இழந்து விட வேண்டும் என்று ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் நிறைய பஞ்சாயத்துகளில் கலந்து கொண்டிருக்கிறேன். நிறைய கிரய ஒப்பந்தங்களை பார்த்திருக்கிறேன். கிரய ஒப்பந்தத்தில் 3 மாத காலம் தான் அவகாசம் கொடுத்திருந்ததால் கிரய பத்திரம் பதிவு செய்யப்படவில்லை. 3 மாதத்திற்குள் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். வாதி கேட்டும் பிரதிவாதிகள் காலம் தாழ்த்தி வந்ததால் கிரய பத்திரம் பதிவு செய்யப்படவில்லை.

5) வாதி எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த ஒப்பந்தமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. காதர் அலியும் வாதியும் உள்ளூர் காரர்கள், நண்பர்கள்தான். வாதி பிரதிவாதிகளின் நிலத்தில் பெட்ரோல் பங்க் அமைத்து அதில் பிரதிவாதியை பங்குதாரராக சேர்த்து கொள்வதாக சொன்னதால் பிரதிவாதிகள் வாதி சொன்னதை நம்பி எழுதப்படாத வெற்று முத்திரை தாளில் கையெழுத்து போட்டு கொடுத்தார் என்றாலும் அதனை வாதி பயன்படுத்தி மோசடியாக கிரய ஒப்பந்தம் தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வெற்று தாள்களில் பிரதிவாதிகள் அவர் வீட்டில்தான் கையெழுத்து போட்டு கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் சொத்துக்களை வாதி அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மோசடியாக தயாரிக்கப்பட்ட தாவா கிரய ஒப்பந்தத்திற்கு ஆதரவாக வாதி சொல்லி கொடுத்தது போல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.